V8S

www.Padasalai.Net

விருதுநகர் மாவட்டம்

மூன்றாம் இடைப் பருவத் தேர்வு - பிப்ரவரி 2024

www.Trb Tnpsc.com

-----

**வகுப்பு 8**

**அறிவியல்**

கால அளவு: 1.30 மணிநேரம் | மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10×1=10

1) பின்வருவனவற்றுள் காந்தத்தால் கவரப்படும் பொருள் ..........

அ) மரப்பொருள்கள் ஆ) ஏதேனும் ஓர் உலோகம்

இ) தாமிரம் ஈ) இரும்பு மற்றும் எஃகு

2) காந்த ஊசி ........... பயன்படுகிறது.

அ) காந்தவிசைக்கோடுகளை வரைய ஆ) காந்தப்புலத்தின் திசையை அறிய

இ) கடல் பயணத்திற்கு ஈ) மேற்காண் அனைத்தும்

3) ராக்கெட்டில் பயன்படும் தத்துவம் .............

அ) நியூட்டனின் முதல் விதி ஆ) நியூட்டனின் இரண்டாம் விதி

இ) நியூட்டனின் மூன்றாம் விதி ஈ) இவை அனைத்தும்

4) சிவப்புக் கோள் என்று அழைக்கப்படுவது ..............

அ) புதன் ஆ) வெள்ளி இ) பூமி ஈ) செவ்வாய்

5) ஒரு எரிபொருளின் கலோரி மதிப்பின் அலகு

அ) கிலோ/ஜூல்/மோல் ஆ) கிலோ ஜூல்/கிராம்

இ) கிலோ ஜூல் / கிலோ கிராம் ஈ) ஜூல் / கிலோ கிராம்

6) வாயுக்கசிவை அறிவதற்காக LPG வாயுவுடன் சேர்க்கப்படும் வேதிப்பொருள் ..........

அ) மெத்தனால் ஆ) எத்தனால் இ) கற்பூரம் ஈ) மெர்காப்டன்

7) மண்ணில் விதைகளை இடும் செயல்முறையின் பெயர் ...........

அ) உழுதல் ஆ) விதைத்தல் இ) பயிர்ப்பெருக்கம் ஈ) பயிர் சுழற்சி

8) பின்வருவனவற்றுள் பஞ்சகவ்யாவில் இல்லாதது எது?

அ) பசுவின் சாணம் ஆ) பசுவின் சிறுநீர் இ) தயிர் ஈ) சர்க்கரை

9) சிவப்பு தரவு புத்தகம் ............ பற்றிய பட்டியலை வழங்குகிறது.

அ) உள்ளூர் இனங்கள் ஆ) அழிந்துபோன இனங்கள்

இ) இயற்கை இனங்கள் ஈ) இவை எதுவுமில்லை

10) வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் .......... ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அ) 1986 ஆ) 1972 இ) 1973 ஈ) 1971

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5×1=5

11) ஒரு காந்தம் ........... முனைகளைக் கொண்டது

12) நிலவின் மேற்பரப்பில் நடந்த முதல் மனிதர் ................ ஆவார்

13) காற்றில்லாச் சூழலில் நிலக்கரியை வெப்பப்படுத்துவது ............. எனப்படும்

14) ........... மையங்கள் ICAR மற்றும் விவசாயிகளுக்கிடையேயான இறுதி இணைப்பாகச் செயல்படுகின்றன.

15) WWF என்பது ............ ஐக் குறிக்கிறது.

**III. கூற்றுகளும் காரணங்களும் ஆராய்ந்து சரியான ஒன்றைத் தேர்வு செய்.** 2×1=2

16) **கூற்று** : இரும்புத் துருவல்களின் செறிவு காந்தத்துருவப் பகுதிகளில் அதிகம்

**காரணம்** : காந்தங்கள் மிகவும் கூர்மையானவை.

17) **கூற்று** : புவியின் காந்தப்புலம் அதன் உள்ளகத்தில் உள்ள இரும்பினால் உருவாகிறது.

**காரணம்** : உயிர் வெப்பநிலையில் ஒரு காந்தமானது அதன் காந்தப்பண்பினை இழக்கும்

அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. மேலும், காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம்

ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமல்ல

இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் தவறு

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**IV. சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறான கூற்றைத் திருத்தி எழுதுக.** 2×1=2

18) சந்திரயான் -1 ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

19) PSLV மற்றும் GSLV ஆகியவை இந்தியாவின் புகழ்பெற்ற செயற்கைக் கோள்கள் ஆகும்.

**V. பொருத்து.** 5×1=5

| | | |
|---|---|---|
| 20) கிர் தேசியப் பூங்கா | - | மத்திய பிரதேசம் |
| 21) சுந்தரபன்ஸ் தேசியப் பூங்கா | - | உத்தரகாண்ட் |
| 22) இந்திரா காந்தி தேசியப் பூங்கா | - | மேற்குவங்காளம் |
| 23) கார்பெட் தேசியப் பூங்கா | - | குஜராத் |
| 24) கன்ஹா தேசியப் பூங்கா | - | தமிழ்நாடு |

**VI. ஏதேனும் 8 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 8×2=16

25) காந்தப்புலம் - வரையறு

26) இயற்கை மற்றும் செயற்கைக் காந்தங்களை வேறுபடுத்துக.

27) விண்மீன் திரள் - வரையறு

28) நாசாவில் பணியாற்றிய சில இந்தியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

29) சங்கிலித் தொடராக்கம் என்றால் என்ன?

30) CNG என்பதை விரிவு படுத்த எழுதுக. அதன் இரு பயன்களை எழுதுக.

31) தமிழ்நாட்டில் காற்றாலைகளைப் பயன்படுத்தி காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படும் இடங்களை எழுதுக.

32) உழுதல் வரையறு

33) பயிர்ச்சுழற்சி என்றால் என்ன?

34) பசுந்தழை உரம் என்றால் என்ன?

36) புவி வெப்பமடைதல் என்றால் என்ன?

**VII. ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விரிவான விடையளி.** 2×5=10

37) காந்தத்தின் அன்றாட வாழ்வியல் பயன்களைப் பட்டியலிடுக.

38) சந்திராயன் -1 ன் சாதனைகள் யாவை?

39) பல்வேறு எரிபொருள் வாயுக்களைப் பற்றி எழுதுக.

40) வேளாண் செயல்முறைகளை விவரி.

- - - - - - -

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com